திருமதி. பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரத்தில் 'Point of Order' வராது.

நகராட்சிகள் திரையரங்குகளை கட்டி நடத்த அனுமதி

* 3100 திரு. என். பழனிவேல் மற்றும் திரு. வி. இராமசாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நகராட்சிகளே திரையரங்குகளைக் கட்டி நடத்த அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள் இன்று நிதி நெருக்கடியால் பெரிய சிரமத்துக்கு உள்ளாகிக் கொண்டு இருக்கின்றன. ஆகவே அவைகளின் நிதிக் குறைபாட்டைத் தீர்ப்பதற்கு, திரையரங்குகள் கட்டி அவைகளினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நகராட்சிகளைப் பொறுத்த வரையில் உலக வங்கியின் மூலமும் மற்றும் நிர்வாகத் துறையின் மூலமும் கடன் பெற்று லாபகரமான காரியங்களில் ஈடுபடலாம் என்ற விதியின் கீழ் வணிக வளாகம், பேருந்து நிலையங்கள் மற்றும் இது போன்ற வருவாய்ப் பலன் தரத்தக்க பணிகள் கட்டப்படுவது உண்மை. ஆனால் அப்படிப்பட்ட பணிகள் எல்லாம் மக்களின் மிக அத்தியாவசியத் தேவையைக் கருதி எடுத்துக் கொள்ளப்பட்டு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இதுபோன்ற பணிகள் எல்லாம் முடிவுற்று பிறகு அந்தப் பணியை எடுத்துக் கொள்ளலாம் என்றும், திருப்தி கரமான நிலை எந்த நகராட்சிக்கு இருக்கிறதோ அந்த நகராட்சி விரும்பினால் அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய 75 நகராட்சிகளில் பெரும்பாலும் எல்லா நகராட்சிகளிலும் வரக்கூடிய வருமானம்

213994.
சென்னை-600 008

1990 ஏப்ரல் 20]

அங்குள்ள ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கக்கூடிய நிலையில் தான் இருக்கிறதேயொழிய வேறல்ல. எனவே அங்கு வருமானம் அதிகம் வரும் அளவுக்கான நடைமுறையை அரசு கையாண்டு இப்படி திரையரங்குகள் போன்றவற்றை எடுத்துக் கொண்டு நடத்துவதன் மூலமும் அங்கு வருமானத்தைப் பெருக்குவதற்கு அரசிடத்தில் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போல பலன் தரத்தக்க பணிகள், மக்களின் அத்தியாவசியத் தேவைகளைத் தீர்ப்பதற்குமான பணிகள் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன என்று சொன்னேன். திருமண மண்டபங்கள் கட்டப் படுவது பற்றி சில நகராட்சி மன்றங்கள் தீர்மானங்கள் நிறை வேற்றி அரசுக்கு அனுப்பி இருக்கின்றன. அது தியேட்டரா, சினிமா தியேட்டரா, திருமண மண்டபமா என்று பார்க்கும் போது, திருமண மண்டபத்துக்கு முதலிடம் அளிப்பதுதான் நியாயமாக என்னைப் பொறுத்தவரை நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட பணிகள் எல்லாம் எங்கெங்கே எந்த நகராட்சி களில் நிறைவு பெற்று இருக்கிறதோ அதற்கு அடுத்தாற்போல் இந்தப் பணியை நகராட்சி மன்றங்கள் முற்படுமேயானால் அவை களைப்பற்றி நிச்சயமாக இந்த அரசு ஆலோசித்து முடிவு தெரிவிக்கப்படும்.

சமுதாயக் குழாய்க் கிணறுகள்

*3424—திரு. கோ. வீரையன்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்குப் பயன் படும் வகையில் அமைக்கப்பட்ட சமுதாயக் குழாய் கிணறுகள் பயன்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதை மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.